01.09.2026 HMOP.No.142/2022 PW2 Name :.ராமசாமி

குறுக்கு விசாரணை

1. மனுதாரர் அரிகிருஷ்ணன் என் உறவினர் என்றால் சரி. அவர் எனக்கு பங்காளி. அவர் கேட்டு கொண்டதால் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. அவர் கூறிய விவரத்தை என்னுடைய பிரமாண பத்திரத்தில் தட்டச்சு செய்யபட்டது என்றால் சரி. அதை படித்து பார்த்த பிறகு நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரி. அரிகிருஷ்ணன் எதற்காக மனு தாக்கல் செய்தார் என்றால் விவாகரத்து கேட்டு போட்டிருக்கிறார்.
2. அரிகிருஷ்ணன் என்னென்ன கல்யாண செலவு செய்தார் என்றால் மண்டப செலவு சாப்பாட்டு செலவு ஆகியவை செய்தது தெரியும். எவ்வளவு ரூபாய் செலவு செய்தார் என்றால் எவ்வளவு என்று தெரியவில்லை. எதிர்மனுதாரர் குடும்பத்தை மனுதாரர் தான் பரமாரிக்கவேண்டும் என்று யாரிடம் பேசினார் என்று எனக்கு தெரியாது அரி தான் கூறினார். எதிர்மனுதாரர் குடும்பத்தை மனுதாரர் பராமரிக்கவேண்டும் என்று எந்த காலத்திலும் கூறவில்லை என்றால் சரி.
3. எதிர்மனுதாரர் தனிகுடித்தனம் போகவேண்டும் என்று கேட்பதாக என்னிடம் யார் கூறினார் என்றால் அடிக்கடி சண்டை நடக்கும்போது நான் போய் கேட்பேன். அப்போது அரிகிருஷ்ணன் எதிர்மனுதாரர் தனிகுடித்தனம் போகவேண்டும் என்று சண்டைபோடுவார். சண்டையை நான் நேரிடையாக பார்த்திருக்கிறேனா என்றால் ஒருசில நேரங்களில்

பார்த்திருக்கிறேன். அவ்வாறு சண்டைய நேரில் பார்த்திருக்கிறேன் என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரி.

4. நான் சண்டைய நேரில் பார்க்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பஜார் போய்விட்டு அவர் வீட்டிற்கு வரும்போது பார்த்திருக்கிறேன். எப்போது பிரச்சனை செய்துவிட்டு எதிர்மனுதாரர் சென்றார் என்றால் எப்போது என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது. பெரியளவில் என்ன பிரச்சனை ஏற்பட்டு எதிர்மனுதாரர் அழைத்து சென்றார் என்றால் பக்கத்து வீட்டுகாரர் இரவு 7, 8 மணிக்கு அழைத்து சென்றார்கள். பக்கத்து வீட்டில் என்ன சொன்னார்கள் என்றால் 7, 8 பேர் வந்து பிரச்சனை செய்து தேவியை அழைத்து சென்றதாக பக்கத்து வீட்டுகாரர்கள் கூறினார்.

5. அது குறித்து 2 நாட்கள் கழித்து அரியிடம் ஏம்பா அதுபற்றி கூறவில்லை என்று கேட்டபோது எத்தனை தடவை பஞ்சாயத்து கூறுவது எனக்கே அசிங்கமாக இருக்கிறது என்று கூறினார். அரிகிருஷ்ணன் வீட்டிலிருந்து என் வீடு 3/4 கி.மீ தூரம் இருக்கும். அரிகிருஷ்ணன் வீட்டில் என்ன நடக்கிறது என்பது எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரி. அரிகிருஷ்ணன் என்னிடம் வந்து கூறினால் மட்டும் தான் தெரியும் என்றால் சரி.

6. எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செய்யவேண்டிய அனைத்து பணிவிடைகளையும் செய்து வந்தார் என்றாலும் மனுதாரர் அரிகிருஷ்ணன் தான் வரதட்சணை செய்து பிரச்சனை செய்தார்

என்றால் சரியல்ல. அவர் அதுபோன்ற ஆள்கிடையாது அவர் எல்லா விவரமும் தெரிந்து தான் திருமணம் செய்துகொண்டார். வரதட்சணை கேட்டு அரிகிருஷ்ணன் எட்டி உதைத்ததால் தான் எதிர்மனுதாரரின் கருகலைந்தது என்றால் சரியல்ல. ஏற்கனவே கலைக்கவேண்டாம் என்று அரி கூறிய பிறகும் எதிர்மனுதாரர் தான் விரும்பி கலைத்துகொண்டார்.

7. எதிர்மனுதாரர் அரிகிருஷ்ணனை தனிகுடித்தனம் போகவேண்டும் என்று எப்போதும் கட்டாய படுத்தவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் அரிகிருஷ்ணனின் பெற்றோர்களை பராமரிக்கமாட்டேன் என்று எந்த காலத்திலும் எதிர்மனுதாரர் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் எந்தகாலத்திலும் பஞ்சாயத்து செய்யவில்லை என்றாலும் அரிகிருஷ்ணன் வேண்டபட்டவர் என்பதால் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 01/09/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

Sd/xxxx<br>
சார்பு நீதிபதி<br>
வாணியம்பாடி.